**வியாபார இணைய வங்கிச்சேவை விண்ணப்பம்**

**வியாபாரம்/ஒழுங்கமைப்பின் விபரங்கள்**

| | |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட பெயர் | |
| பதிவு இலக்கம் | |
| பதிவுசெய்யப்பட்ட முகவரி | |
| தபால் முகவரி (பதிவுசெய்யப்பட்ட முகவரியிலிருந்து வேறுபட்டதாயின்) | |

விஇவ இக்கு இணைக்கப்படவேண்டிய கணக்கு இலக்கங்கள்

1.

2.

3.

4.

5.

6.

அமைப்பாக்கம் ('x' எனக்குறிப்பிடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தனி உரிமை | | வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனி | | வரையறுக்கப்பட்ட பகிரங்க கம்பெனி | |
| கம்பனி/அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு | | ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | | | |

கம்பெனி நிருவாக பயனாரின் விபரங்கள்

| | |
|---|---|
| முழுப்பெயர் | |
| முதலெழுத்துக்களுடன் பெயர் | |
| விரும்பிய பயனர் அடையாளம் | |
| தேஅஅ இல | |
| தனிப்பட்ட முகவரி | |
| பதவி | |
| தொலைபேசி (அலுவலகம்) | |
| மொபைல் | |
| மின்னஞ்சல் (அலுவலகம்) | |

என்னுடைய தொழில்வழங்குநர்/ பங்குதாரர் (ஏனையவை ..............) சார்பாக மேற்குறிப்பிடப்பட்ட நிறுவன கணக்கின் (கணக்குகளின்) பயனராக எனக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளை நான் முழுமையாகவும் போதுமானளவிலும் புரிந்துக்கொண்டுள்ளேன்.

கம்பனி ஊடாக மேலே குறிப்பிடப்பட்ட மொபைல் இலக்கம்/ மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றப்படுமாயின் வங்கிக்கு அறிவிக்க நான் மேலும் உடன்படுகின்றேன்.

கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல்லை எவரேனும் மூன்றாம் திறத்தவருக்கு பகிரங்கப்படுத்தமாட்டேன் என நான் மேலும் உடன்பட்டு பொறுப்பேற்கின்றேன்.

டோக்கன் குறியீட்டிலக்கம், டோக்கன் விபரங்கள் அல்லது டோக்கன் கருவிகளை எவரேனும் மூன்றாம் திறத்தவருக்கு கையளிக்கமாட்டேன் என நான் மேலும் உடன்பட்டு பொறுப்பேற்கின்றேன்.

SDB வங்கி வியாபார இணைய வங்கி வசதியை ஆளுகின்ற நியதிகள் மற்றும் நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளை நான் வாசித்துள்ளேன் என்றும் முழுமையாகவும் போதுமானளவிலும் புரிந்துக்கொண்டுள்ளேன் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். நான் அவற்றுக்கு கீழ்ப்படிய இத்தால் உடன்படுகின்றேன்.

பெயர் ____________________

கையொப்பமும் கம்பெனியின் முத்திரையும்      திகதி

குறிப்பு: மேலே காட்டப்பட்டவாறு கம்பெனியின்/நிறுவகத்தின் நிர்வாக பயனரை உருவாக்க SDடீ வங்கிக்கு அதிகாரமளிக்கின்ற தனித்தனி சபைத் தீர்மானங்கள் கம்பெனி/நிறுவகத்தினால் வழங்கப்படுதல்வேண்டும். கம்பெனி பயனாளர் சேவையை இடைநிறுத்தல்/சேவை மாற்றத்தின்போது, SDB வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

விரும்பிய கம்பனி அடையாளம்

(இரு விரும்பிய அடையாளங்களை பூர்த்திசெய்தல் கட்டாயமானதாகும். முதலாவது தெரிவு ஏலவே காணப்பட்டால், வங்கி இரண்டாவது தெரிவினை பயன்படுத்தும்)

1வது தெரிவு

2வது தெரிவு

பயனர் தொகுதி

உங்களது வியாபார தேவைப்பாட்டுக்கு பொருந்துகின்ற பயனர்களின் பொருத்தமான எண்ணிக்கையைத் தெரிவுசெய்யவும் ☐☐

இரட்டை கட்டுப்பாடு தெரிவு

தேவையானது ☐ (குறைந்தபட்சம் இரண்டு தேவைப்பாடுகள்)

தேவையற்றது ☐ (கம்பனி இணைய வங்கிச்சேவையை ஒரு பயனர் பேணலாம்)

பின்வரும் கொடுக்கல்வாங்கல் எல்லைகளை 3ஆம் திறத்தவருக்கு அல்லது ஏனைய வங்கி கொடுக்கல்வாங்கல்களுக்கு குறித்தொதுக்க நான்/நாம் இத்தால் உடன்படுகின்றேன்/உடன்படுகின்றோம்.

- நாளொன்றுக்கான எண்ணிக்கை ☐☐
- நாளொன்றுக்கான கொடுக்கல்வாங்கல் பெறுமதி ரூ ☐☐☐☐☐☐☐

**வியாபார இணைய வங்கிச்சேவைக்கான நியதிகளும் நியமங்களும்**

இந்நியதிகளும் நியமங்களும் சனச அபிவிருத்தி வங்கி பிஎல்சி இனால் வழங்கப்படும் வியாபார இணைய வங்கிச்சேவைக்கு செல்லுபடியானதாகும்.

இந்நியதிகளும் நியமங்களும் கம்பனி கணக்குகளின் பொதுவான நியதிகளும் நியமங்களுக்குமான குறைநிரப்பியாக காணப்படுகின்றன

## 1. வரையறுக்கப்பட்ட நியதிகள்

“கணக்கு(கணக்குகள்) என்பது சனச அபிவிருத்தி வங்கி பிஎல்சி இற்கு சொந்தமானதும், சேவைக்கு தகுதியானதும் மற்றும் ஆரம்பிக்கப்படவுள்ள ஏதேனும் புதிய கணக்குகள் உள்ளடங்கலாக, இதன்பால் இணைக்கப்பட்டதுமான அனைத்து கம்பனி கணக்குகள் எனப்பொருள்படும்.

“SDB வங்கி”/“வங்கி” என்பது சனச அபிவிருத்தி வங்கி பிஎல்சி எனப்பொருளாகும்.

“விஇவ” என்பது வியாபார இணைய வங்கிச்சேவை எனப்பொருளாகும்.

“ஒழுங்கமைப்பு” என்பது விஇவ சேவைகளின்கீழ் பதிவுசெய்யப்படப்போகும் நிறுவகமும் மற்றும் இந்நியதிகளைம் நியமங்களையும் ஏற்றுக்கொண்டுள்ள கணக்குடைமையாளர்களும்

எனப்பொருள்கொள்ளப்படும் என்பதுடன் "ஒழுங்கமைப்பு" என்பது அதனுடன் தொடர்புடைய பொருளையும் கொண்டிருக்கும்.

"இ.ரூ" என்பது இலங்கை ரூபா எனப்பொருளாகும்.

"வங்கி நாள்" என்பது இலங்கையிலுள்ள வங்கிகள் பணிக்காக திறந்திருக்கின்ற எந்தவொரு தினத்தினையும் குறிப்பதாகும்.

"கம்பனி அடையாளம்" என்பது SDB வங்கியின் நிகழ்நிலை விஇவ இல் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதியில் வங்கி அடையாளப்படுத்தக்கூடியதான 2-15 தனித்துவமான எண்ணெழுத்து அம்ச அடையாளம் எனப்பொருளாகும்.

"அறிவுறுத்தல்" என்பது கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல் மற்றும் டோக்கன் இரகசிய குறியீடு என்பவற்றைப் பயன்படுத்தி சேவையின் ஊடாக விஇவ இக்கு சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை அல்லது அறிவுறுத்தல் எனப்பொருளாகும்.

"கடவுச்சொல்" என்பது கம்பனி பயனரினால் அவன்/அவள் விஇவ இற்காக "பயனர் உள்நுழைவு" இனை மேற்கொள்கின்றபோது உருவாக்கப்பட்ட குறைந்தது எட்டு எண்ணிம குறியீடு (எழுத்து, இலக்கம் மற்றும் விசேட குறியீடுகள்) எனப்பொருளாகும்.

"சேவை" எனப்படுவது இலத்திரனியல் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் பரிவர்த்தனைகளை (கணக்குடன் தொடர்புடையவை உள்ளடங்கலாக) இணைய வலைத்தளம் ஊடாக ஒழுங்கமைப்புக்கு கிடைக்கக்கூடியதாக SDB வங்கி மேற்கொள்கின்ற விஇவ சேவை எனப்பொருளாகும்.

"நியதிகளும் நியமங்களும்" என்பது காலத்திற்கு காலம் திருத்தப்படுகின்றவாறான நியதிகளும் நியமங்களும் எனப்பொருளாகும்.

"பயனர்(கள்)" என்பது சேவைக்கும் கணக்கிற்குமான அணுகலைக் கொண்டிருக்க ஒழுங்கமைப்பினால் பயன்படுத்த/செயற்படுத்த/அனுமதிக்க முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்கள் எனப்பொருளாகும்.

"பயனர் அடையாளம்" என்பது ஒவ்வொரு ஒழுங்கமைப்பினது பயனாளர்களையும் வங்கி அடையாளப்படுத்தக்கூடியதான 2-15 தனித்துவமான எண்ணெழுத்து அம்ச விஇவ அடையாளம் எனப்பொருளாகும்.

"OTP குறியீடு" எனும் ஒரு நேர கடவுச்சொல் (OTP) என்பது பயனாளருக்கு ஒற்றை கொடுக்கல் வாங்கல் அல்லது உள்நுழையும் அமர்வுகளுக்காக அதிகாரமளிக்கின்ற தன்னியக்கமாக உருவாக்கப்படுகின்ற எண் அல்லது எண்ணெழுத்து அம்சங்களின் தொகுப்பொன்றாகும். இதனை கடவுச்சொல் மீளமைப்பு, கொடுக்கல் வாங்கல் எல்லை விஞ்சுதல் முதலியனவற்றிற்கு பயன்படுத்தலாம்.

"தரவு" என்பது கணினியினால் செயற்படுத்தப்படும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றதும் இலத்திரனியல் சமிக்ஞை வடிவத்தில் களஞ்சியப்படுத்தப்படக்கூடியதும் பரிமாற்றப்படக்கூடியதும் அத்துடன் காந்தப்புல, கட்புல அல்லது இயந்திர பதிவு ஊடகங்களினால் பதிவுசெய்யப்படக்கூடியதுமான அளவீடுகள், அம்சங்கள், அல்லது குறியீடுகள்.

"புலமைச் சொத்து உரிமை" என்பது வங்கியின் சொல்லப்பட்ட உரிமைகள் கையகப்படுத்தல், குறித்தொதுக்கல், சட்டம் அல்லது ஏனைய வகைகளில் கையகப்படுத்தப்பட்டிருந்தாலும் அல்லாவிடினும் ஆக்கவுரிமை வடிவமைப்பு, வியாபாரச்சின்னங்கள் மற்றும்/அல்லது ஏதேனும் வரைவிலக்கணத்தின் ஏனைய எவையேனும் புலமைச்சொத்து உரிமை/உரிமைகள் எவ்வாறானவை

எனவறிந்து வடிவமைப்பு உரிமைகள் பிரதியெடுக்கும் ஏதேனும் அல்லது எல்லா உரிமைகளும் எனப்பொருள்படும்.

(வாக்கிய தலைப்புகள் சௌகரியம் மற்றும் குறித்துரைப்பிற்காக மாத்திரமே இடப்படுகின்றன என்பதுடன் இதன் முன்வைப்புகளது விளக்கங்களை பாதித்தலாகாது. உள்ளடக்கங்கள் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய ஒருமையை வெளிப்படுத்தும் சொற்கள் பன்மையையும் பன்மையை வெளிப்படுத்தும் சொற்கள் ஒருமையையும் உள்ளடக்குதல் வேண்டும்.)

## 2. ஏற்பு

சேவையைப் பயன்படுத்துகின்றபொழுது, ஒழுங்கமைப்பானது இந்''நியதிகளையும் நியமங்களையும்'' ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## 3. சேவையைப் பயன்படுத்துதல்

கம்பனி பயனாளர் எல்லா வகை கம்பனி கணக்கு நிலுவைகள், அனைத்து கொடுக்கல் வாங்கல் வரலாற்றினை பார்ப்பதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் இச்சேவையை பயன்படுத்தப்படுவது மாத்திரமின்றி நிலையான வைப்புகளின் கீழ் கொடுக்கல்வாங்கல், நிதி பரிமாற்றங்கள், கொடுப்பனவு சேவைகள், கடன் மீள்கொடுப்பனவு, சம்பளம் வழங்கல், பணவலுப்பல், வர்த்தக நிதி, வர்த்தக கடன், காசோலை சேவைகளையும் மேற்கொள்ளலாம் என்பதுடன் கம்பனி அனுமதிகளுடன் அதிகாரமளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலாக வங்கிக்கும் சமர்ப்பிக்கலாம். இச்செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, இச்சேவையானது கம்பனி நிர்வாகியாக கம்பனி பயனர் விபரங்கள் மற்றும் கம்பனி விபரங்களை முகாமைத்துவம் செய்யும்.

## 4. புலமைச் சொத்துரிமை, பதிப்புரிமை மற்றும் ஏனைய இணைந்த உரிமைகள்

விஇவ சேவையானது எந்நேரமும் வங்கியின் முற்றுரித்து ஆதனமாக காணப்படும் என்பதனையும் எந்தவொரு சூழ்நிலையிலும் வங்கியின் ஆதனத்தில் எவையேனும் உரிமைகளை பெறவோ அல்லது பெற்றுக்கொள்ள முயலுதலோ ஆகாது என்றும் விஇவ சேவையை அல்லது அதனுடன் தொடர்புடைய ஏதேனும் தகவல், தொழிநுட்பம், தரவுகள் அல்லது வடிவமைப்பினை பிரதியெடுத்தலோ ஆகாது என்பதனையும் ஒழுங்கமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

## 5. நியதிகளும் நியமங்களுக்குமான மாற்றங்கள்

இந்நியதிகளையும் நியமங்களையும் மற்றும் எந்நேரத்திலும் இச்சேவை தொடர்பாக விநியோகித்திருந்த ஏனைய ஏதேனும் தகவல்களையும் மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. வங்கியானது இழப்புகளுக்கான பொறுப்புகள் அல்லது ஏதேனும் பருவகால கொடுக்கல் வாங்கல்களிலான சீராக்கல்களில் ஒழுங்கமைப்பின் பொறுப்பினை அதிகரிக்கும் ஏதேனும் புதிய கட்டணம்/இறுப்பனவுகளை அல்லது கட்டணம்/இப்பனவுகளில் ஏதேனும் மாற்றங்களை அறிமுகப்படுத்தினால், ஒழுங்கமைப்புகளுக்கு 15 நாள் எழுத்துமூல அறிவித்தல் வழங்கப்படும். (உதாரணமாக கணக்குக் கூற்றில் அல்லது எமது வலைதளத்தில்). வேறேதேனும் மாற்றங்கள் குறித்த அறிவித்தல் எமது SDB வங்கி வலைதளத்தில் முற்கூட்டியே பதிவிடப்படும் (www.sdb.lk).

## 6. ஒத்திசைதல்

மூன்றாம் திறத்தவரின் கணக்குக்கு ரூபா இருநூறாயிரம் அல்லது அதற்கு இணையான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினால் தனியாகவோ அல்லது திரண்டதாகவோ வழங்கும்போது, நோக்கம் வழங்கப்படுதல் வேண்டும்.

## 7. ஏனைய நிபந்தனைகள்

முழுமையாகவோ/ பகுதியளவிலோ அச்சிடப்படுகின்ற/ பதிவிறக்கப்படுகின்ற, விஇவ இடமிருந்து அச்சிடப்பட்ட/பதிவிறக்கப்பட்டதன் பின்னரான ஏதேனும் திருத்தப்பட்ட/ நீக்கப்பட்ட/ வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கான பொறுப்பினை SDB வங்கி கொண்டிருக்காது

ஏதேனும் நேரடி, மறைமுக, தண்டிக்கத்தகு, சந்தர்ப்பவசமான, விசேட, உடனிகழ்வான சேதங்கள் அல்லது மட்டுப்பாடுகள் இன்றி, எவற்றையேனும் உள்ளடக்கிய ஏதேனும் சேதங்களுக்கு, வங்கி வலைத்தளத்தை அல்லது தொடர்புடைய சேவையை பயன்படுத்துவதிலான தாமதம் அல்லது இயலாமை, சேவை வழங்க, அல்லது ஏதேனும் தகவல், மென்பொருள், உற்பத்திகள் மற்றும் சேவைகளை வங்கி வலைத்தளத்தின் ஊடாக வழங்குவதிலான ஏற்பாடுகள் அல்லது தவறுகைகள், அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ, அறியாமை, கடுமையான பொறுப்புடைமை அல்லது வங்கி வலைத்தளத்தை பயன்படுத்துவதற்கு அப்பால் வேறுவகையில் எழுகின்ற விஇவ இன் பயன்பாடு அல்லது செயற்பாட்டுடன் தொடர்புடைய ஏதேனும் வழியில் வெளியிலிருந்து அல்லது உள்ளிருந்து எழுகின்ற தரவுகளை அல்லது இலாபங்களை ஒழுங்கமைப்புகள் பயன்படுத்தும் இழப்புக்கான சேதங்களுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் SDB வங்கி பொறுப்புடையதாகமாட்டாது.

கணக்கு தகவல் போன்ற, சேவையின் குறிப்பிட்ட ஏற்பாடுகள், விஇவ தரவுதளத்துடனான பாதுகாப்பான மற்றும் தொடர்ச்சியான தொடர்பில் தங்கியுள்ளன. அத்தகைய தொடர்புகள் எப்பொழும் கிடைக்கப்பெறும் என்பது குறித்து வங்கி எந்த உத்தரவாதமும் மேற்கொள்வதில்லை. தளத்தின் பாதுகாப்பு அல்லது தரவு கசியக்கூடும் எனக் கருதினால் சேவையை இடைநிறுத்துவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

வங்கி வலைதளத்தின் சேவை வழங்கல்களை எக்காரணத்தினையும் குறித்தொதுக்காமல் அதனுடைய தற்றுணிபில் இடைநிறுத்தலாம், அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒழுங்கமைப்பு, கணக்கு வைத்திருக்கும் கிளைக்கு/அழைப்பு மையத்துக்கு (011 5 411 411) ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்காக அழைக்கலாம்.

வலைதளத்தின் ஊடாக வழங்கப்படும் சேவையின் பல்வேறு வழங்கல்கள் கட்டணங்கள் ஏதுமின்றி ஒழுங்கமைப்புகளுக்கான சிறப்புரிமைகளாக வழங்கப்படுகின்றன. எனினும், இதனகத்து வழங்கப்படுகின்ற குறிப்பிட்ட சேவைகளை கருத்திற்கொண்டு காலத்துக்கு காலம் செல்லுபடியாகுமாறு கட்டணங்களை விதிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

## 8. இலத்திரனியல் விளம்பரப்படுத்தல்கள்

ஒழுங்கமைப்பு சேவையை அணுககக்கூடிய வலைதளத்தில் தன்னுடைய சொந்த உற்பத்திகள் அல்லது சேவைகளை வங்கி காலத்திற்கு காலம் விளம்பரப்படுத்தும். சொந்த மின்னஞ்சல்/ மொபைல் இலக்கத்திற்கு அனுப்பப்படும் விஇவ தொடர்புடைய எவையேனும் இ-சந்தைப்படுத்தல் விடயங்களை நிறுத்துவதற்கான உரிமையை ஒழுங்கமைப்பு கொண்டுள்ளது. எனினும், இந்நிபந்தனையானது வங்கி மற்றும் ஒழுங்கமைப்புக்கிடையிலான இ-சந்தைப்படுத்தல் தொடர்பான ஏதேனும் உடன்படிக்கையின் வேறேதேனும் நிபந்தனைகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாது.

## 9. இணைய வங்கிச்சேவையின் பாதுகாப்பு

SDB வங்கியானது வலுவான பாதுகாப்புக்காக எந்நேரமும் கண்காணிக்கப்படுகின்ற, மோசடி கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பு தொழிநுட்பத்தினை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களின் நிகழ்நிலை பாதுகாப்பினை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது. ளுனுடீ கடவுச்சொல் கொள்கையின்கீழ் முதற் காரணி அதிகாரவளிப்பாக கடவுச்சொற்களைப் பயன்படுத்துவதனால் தங்களது அதிகாரவளிப்புக்களை ஒழுங்கமைப்பின் பயனாளர் பாதுகாக்கமுடியும் என்பது மாத்திரமின்றி, இரண்டாம் காரணி அதிகாரவளிப்பாக SDB வங்கியும் உயர் பாதுகாப்பு வன்பொருள்/ மென்பொருள் டோக்கன்களை வழங்குகின்றது.

SDB வங்கி அதிகாரமளிக்கப்படாத அணுகலிலிருந்து ஒழுங்கமைப்பின் கணக்குகளை பாதுகாக்க மிகஉயர் மட்ட மறைக்குறியீடாக்கங்களைப் பயன்படுத்துகின்றது. அத்தகைய மட்டங்களிலான மறைக்குறியீடாக்கங்களின் பயன்பாடானது பல்வேறு சட்ட நியாயாதிக்கங்களில் அனுமதிக்கப்படுவதில்லையெனினும், உள்ளூர் சட்டத்தினால் அவர்களது கம்பனி பயனாளர்கள் அனுமதிக்கப்படுவதற்கான இயலுமையை உறுதிப்படுத்தவேண்டியது ஒழுங்கமைப்பின் பொறுப்பாகும்.

ஒழுங்கமைப்பின் கம்பனி பயனாளர்களது தொடர்ச்சியான அணுகல் மற்றும் சேவையின் பயன்பாட்டுக்கு (ஒழுங்கமைப்பின் தொலைபேசி அல்லது கணினி) தேவையான ஏதேனும் கருவியை பெற்றுக்கொள்வதற்கும் பேணுவதற்கும் ஒழுங்கமைப்பே பொறுப்பாகும். மேலதிகமாக, அவர்களால் பயன்படுத்தப்படும் சாதனங்களது/கணினிகளது வைரசுக்கு எதிரான மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒழுங்கமைப்பின் பயனாளர்களே பொறுப்பானவர்களாக காணப்படுகின்றார்கள்.

இணைய வசதியின் திறந்த இயல்பு காரணமாக, இணைய தாக்குதல்கள், அதிகாரமளிக்கப்படாத அணுகல், வைரஸ் தாக்குதல் மற்றும் நிறுவப்பட்டுள்ள நவீன பாதுகாப்பு அம்சங்களை முறியடிக்கும் மூன்றாம் திறத்தவரின் ஏனைய திட்டமிட்ட முயற்சிகளிலிருந்து ஒழுங்கமைப்பின் கொடுக்கல் வாங்கல்களுக்கான முழுமையான பாதுகாப்புக்கு SDB வங்கி உத்தரவாதத்தினை வழங்காது.

மேலுள்ள இடர்களுக்கு அப்பால், எதிர்பாரா தொடர்பாடல் வலையமைப்பு அளவுகள் மற்றும் தோல்விகள் காரணமாக, இணையத்தின் ஊடாக தகவல் மற்றும் தொடர்பாடல் பரிவர்த்தனைகளில் நேர தேக்கமொன்று ஏற்படலாம். அதன்பிரகாரம், கோரிக்கையோ அல்லது கொடுக்கல்வாங்கலோ எதிர்பார்க்கப்பட்ட காலத்தினுள் முன்னெடுக்கப்படக்கூடும் என்பதற்கு ளுனுடீ வங்கி உத்தரவாதமளிக்காது

### 10. கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், OTP குறியீடு,

கம்பனி அனைத்து பயனாளர்களும் ஏனும் கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல், டோக்கன் குறியீட்டிலக்கம், தரவு அல்லது சேவையுடன் தொடர்புடைய மென்பொருளுக்கு குந்தகம் விளைவித்தலாகாது அல்லது சேதமேற்படுத்தலாகாது என்பதற்கு உடன்பட்டு பொறுப்பேற்கின்றது.

அனைத்து பயனாளர்களுக்கும் நிகழ்நிலை வங்கிச்சேவை பயனர் பெயர், கடவுச்சொல் மற்றும் டோக்கன் விபரங்கள் உள்ளிட்ட தங்களது தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் திறத்தவருக்கு பகிரக்கூடாது என்பதனை அறிவுறுத்த கம்பனி இத்தால் உடன்படுகின்றது.

கம்பனி எமது தரவுகள், தகவல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் செய்திகளை அதனது சொந்த இடரின்பேரில் வழங்குவதற்கும் அல்லது வழங்குவதற்கு ஏதுவாகுவதற்கும் மற்றும் விஇவ இற்காக அல்லது அதன் தொடர்பில் வங்கிக்கு பரிவர்த்தனைச் செய்யப்படும் அனைத்து தரவுகளும் சரியானதும் முழுமையானதும் என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்று உடன்படுகின்றது.

SDB வங்கி மின்னஞ்சல், அழைப்பு மையம், நிகழ்நிலை வங்கிச்சேவை முறைமை அல்லது குறுந்தகவல் உள்ளிட்ட SDB வங்கியின் அலைவரிசைகள் எவற்றின் ஊடாகவும் பயனர் பெயர்

மற்றும் கடவுச்சொற்களை வழங்குமாறு ஒழுங்கமைப்பு அல்லது அவர்களது பயனாளர்களிடமிருந்து ஒருபோதும் கோராது.

அனைத்து பயனாளர்களும்:

- எந்தவொரு மூன்றாம் திறத்தவருக்கும் குறியீட்டிலக்கம், கடவுச்சொல், அல்லது இரகசியமான விபரங்களை வெளிப்படுத்தாதிருப்பதனையும்
- விஇவ வலைத்தளத்தினை திறப்பதற்கு மின்னஞ்சல் அல்லது ஏனைய மூலங்களிடமிருந்தான இணைப்புக்களை சொடுக்குதல் ஆகாது. எப்போதும் www.sdb.lk அல்லது முகவரி தளத்தில் https://www.sdb.lk என நேரடியாக தட்டச்சு செய்வதன் ஊடாக மாத்திரமே அணுகுங்கள் அத்துடன் இணைப்பானது https://www.sdb.lk எனக் காணப்படுவதனையும் அதனது பாதுகாப்பினை உறுதிப்படுத்த இணைய உலாவி பூட்டு குறியீடினை கொண்டுள்ளமையையும் எப்போதும் உறுதிப்படுத்தவும்.
- எப்போதும் விஇவ வலைத்தளத்திருந்து முறையாக வெளியேறுங்கள் மற்றும் இணைய உலாவி மூடப்பட்டுள்ளமையையும் உறுதிப்படுத்துங்கள்.
- காலக்கிரமத்தில் விஇவ கடவுச்சொல்லை மாற்றவும்.
- டோக்கன் குறியீடிலக்கத்தை பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கவும்
- எந்தவொரு தொடர்பாடல் அலைவரிசை ஊடாகவும் பயனரின் தனிப்பட்ட அல்லது கணக்கு தகவலை வெளிப்படுத்தலாகாது. மாற்றாக, பயனருக்கு ஏதேனும் சந்தேகங்கள் காணப்படின், பயனர் தகவல்களை வழங்க மறுக்கலாம் என்பதுடன் எமது அழைப்பு மையத்தை 011 5 411 411 என்ற எண்ணில் நேரடியாக தொடர்புகொள்ளலாம்.

என்பதற்கு ஒழுங்கமைப்பு பொறுப்பேற்கின்றது.

ஒழுங்கமைப்பின் பயனர்கள் SDB வங்கியின் வலைத்தளமான https://www/sdb/lk இல் காணப்படும் பாதுகாப்பு குறிப்புகள் பகுதியை மீளாயுமாறும் ஒழுங்கமைப்பின் நிதி தகவல்களை பாதுகாப்பதற்கு தேவையான அத்தியாவசிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

SDB வங்கி காலத்திற்கு காலம் கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல், டோக்கன் குறியீட்டிலக்கம் என்பவற்றை பாதுகாப்பதற்கான வழிகாட்டியுரைப்புகளை வழங்கும். வழிகாட்டியுரைப்புகள் பாதுகாப்ப நடவடிக்கைகளுக்கான உதாரணங்களை மாத்திரமே வழங்கும் என்பதுடன் ஒழுங்கமைப்பின் கணக்கிலான ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத அறிவுறுத்தல்களிற்கு பொறுப்பானதாகாது.

அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கான பொறுப்புடைமையானது கீழுள்ள 15 ஆம் வாசகத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். ஒழுங்கமைப்பு சேவையின் ஊடாக ஒழுங்கமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரினாலும்˙ கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல், டோக்கன் குறியீட்டிலக்கம் என்பவற்றை பயன்படுத்தி அவற்றின் கணக்குகள் அணுகப்படலாம் என்பதனை அறிந்து உடன்படுகின்றன. வங்கி ஒழுங்கமைப்பினது கோரிக்கையின் பேரில் அவர்களது கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல், டோக்கன் என்பவற்றை எந்நேரத்திலும் மீளக்கட்டமைக்கும்.

ஒழுங்கமைப்பின் கணக்கிற்கான எந்தவொரு சட்டரீதியற்ற அல்லது அதிகாரமளிக்கப்படாத அணுகலுக்கும் வங்கி பொறுப்புடையதாகமாட்டாது என்பதனை ஒழுங்கமைப்பு நன்கு அறிந்துள்ளது. ஒழுங்கமைப்பின் கணக்குக்கான எந்தவொரு அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டரீதியற்ற அணுகல் தொடர்பிலும் வங்கிக்கு உறப்படக்கூடிய அல்லது நிலையாகக்கூடியதான கோரல், இழப்புகள், சேதங்கள் மற்றும் செலவீனங்கள் (ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சட்ட செலவீனங்கள் உள்ளிட்ட) அனைத்திலிருந்தும் அல்லது ஏதொன்றிலிருந்தும் ஒழுங்கமைப்பு இத்தால் ளுனுடீ வங்கியை ஈட்டுறுதிப்படுத்துகின்றது.

ஒழுங்கமைப்பின் கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல் மற்றும்/அல்லது டோக்கன் குறியீட்டிலக்கம் காணாமற்போயுள்ளமை அல்லது திருடப்பட்டுள்ளமையின் பதிவுகளை அல்லது கம்பனி அடையாளம், பயனர் அடையாளம், கடவுச்சொல் மற்றும்/அல்லது டோக்கன் குறியீட்டிலக்கத்தினை மற்றொரு நபர் அறிந்துள்ளார் அல்லது சேவையின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டினை மேற்கொண்டுள்ளார் எனத்தெரியவருமிடத்து அல்லது சந்தேகிக்குமிடத்து, ஒழுங்கமைப்பு அல்லது அதனது பயனாளர்களில் எவரும் வங்கிக்கு உடனடியாக அறியத்தருதல் வேண்டும். அத்தகைய நிகழ்வின்போது, ஒழுங்கமைப்பு SDB வங்கியின் அழைப்பு மையத்தினை தொடர்புகொள்வதன் ஊடாக எந்நேரத்திலும் உடனடியாக அறியத்தரல் வேண்டும். SDB வங்கி பயனர் அடையாளத்தை (அடையாளங்களை) இரத்துச்செய்யும் அல்லது குறிப்பிட்ட கடவுச்சொல்லை (கடவுச்சொற்களை) மீளக்கட்டமைக்கும் மற்றும் ஒழுங்கமைப்பு புதிய ஒன்றைத் தெரிவுசெய்ய ஒழுங்கேற்படுத்தும்.

ஏதேனும் தரவு, தகவல், அறிவுறுத்தல்கள் மற்றும் செய்திகள் தொடர்பில் அதனது கவனத்திற்கு வரும் அவ்வாறேயான ஏதேனும் தவறுகள், முரண்பாடுகள் அல்லது விடுபடுகைகளை நாம் வங்கிக்கு உடனடியாக அறிவிக்கவும் மற்றும் எழுத்தில், அதிகாரமளிக்கப்பட்ட மின்னஞ்சல் அல்லது விஇவ விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரி வாயிலாக வங்கியினால் பெறப்பட்டிருக்கின்ற அத்தகைய அறிவித்தல் வரும்வரையில் வங்கி மேற்கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் வினையாற்றல் தொடர்பில் எம்முறையிலும் வங்கியை பொறுப்புடையதாக நிறுத்தமாட்டோம் என்பதனை உறுதிப்படுத்தியும் ஒழுங்கமைப்பு வங்கிக்கு பொறுப்பேற்று உறுதிப்படுத்த வேண்டும்.

அத்தகைய அறிவுறுத்தல்கள் கிரமமற்றது என வங்கி கருதினால், கொடுப்பனவு அல்லது ஏனைய அறிவுறுத்தல்களை மதிக்கவேண்டிய கடப்பாட்டினை வங்கி கொண்டிருக்காது என்பதற்கு ஒழுங்கமைப்பு உடன்படுகின்றது.

விஇவ வழியாக எம்மால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட நபரின் ஊடாக விஇவ தொடர்பில் ஒழுங்கமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலை, எந்தவொரு முறையையும் பயன்படுத்தி பதிவுசெய்வதற்கான வங்கியின் சொந்த தற்றுணிவிற்கு, ஒழுங்கமைப்பு இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றது அத்துடன் இந்நியதிகள் மற்றும் நியமங்களின் பிரகாரம் CIB இன் பயன்பாட்டின் ஊடாக எம்மால் ஒரு குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல் பாதிக்கப்பட்டுள்ளதென நிரூபிக்கும் அல்லது உறுதிப்படுத்தும், நோக்கங்களுக்காக ஏனையவற்றுக்கு மத்தியில், அத்தகைய பதிவுகள் வங்கியினால் பயன்படுத்தப்படலாம் என்பதற்கும் உடன்படுகின்றது.

வங்கி ஒழுங்கமைப்பு சார்பாக கொடுப்பனவொன்றை மேற்கொள்கின்றபோது மற்றும்/அல்லது ஒழுங்கமைப்பின் அறிவுறுத்தல்களின்பேரில் வங்கி செயற்படுகின்றபோது, வங்கியானது ஒழுங்கமைப்பின் முகவராக அல்லது எவரின் சார்பாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதோ அல்லது அறிவுறுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டதோ அத்திறத்தவரின் முகவராக செயற்படவில்லை என ஒழுங்கமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

வங்கியின் விஇவ பயன்பாட்டில் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல்களின் வங்கிப் பதிவுகள் மற்றும் கூற்றுகளை முடிவானதாகவும் மற்றும் அனைத்து நோக்கங்களுக்காகவும் வங்கியை பிணைப்பதாகவும் மற்றும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் பயனுறுத்தப்பட்டுள்ளதென உறுதிப்படுத்துவதாகவும் மற்றும் ஒழுங்கமைப்பினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் ஒழுங்கமைப்பினால் பயனுறுத்தப்பட்டனவாக கருதப்படுவதற்கும் ஒழுங்கமைப்பு உடன்படுதல்வேண்டும்.

SDB வங்கி பயனர் அடையாளத்தை அல்லது டோக்கனை, அவை தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது கசியவிடப்பட்டுள்ளன மற்றும்/அல்லது வேறு ஏதேனும் செல்லுபடியான காரணத்துக்காக, முன்னறிவித்தலின்றி எந்நேரத்திலும் இரத்துச்செய்யலாம்

SDB வங்கி ஒழுங்கமைப்பின், அவர்களது பயனர்களின் அல்லது அவர்களது கணக்கு குறித்த தகவல்களை பொலிஸ் அல்லது ஏனைய மூன்றாம் திறத்தவருக்கு, இழப்புகளை தடுப்பதற்கு

அல்லது மீளப்பெறுவதற்கு உதவும் என அது நினைத்தால் வெளிப்படுத்தலாம் என்பதனை ஒழுங்கமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

நாளொன்றுக்கான கொடுக்கல்வாங்கலின் அதிகூடிய பெறுமதி ஊநுகுவு ஒழுங்குவிதிகளினை அடிப்படையாகக் கொண்டிருக்கும் (3ம் திறத்தவருக்கான ரூ.200,000/- இற்கும் மேற்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் நோக்கம் நிதி பரிமாற்றத் திரையின் 'குறிப்புகள்' பகுதியில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.).

ஒழுங்கமைப்பு வங்கியின் விஇவ பயன்பாட்டில் செயன்முறைப்படுத்தப்பட்ட அல்லது பயனுறுத்தப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்குமாக, பயனுறுத்தப்பட்டவை எதுஎவ்வாறாயினும் முழுப்பொறுப்பினையும் ஏற்றல்வேண்டும் அத்துடன் வங்கியின் விஇவ பயன்பாடு ஊடாக, எந்நேரத்திலும் சொல்லப்பட்ட குடியரசில் நிலவும் ஏதேனும் நியதிச்சட்டம் அல்லது ஒழுங்குவிதிகள் அல்லது ஏனைய ஏற்பாடுகளை மீறும் வகையில் நாம் செயற்படவில்லை என்பதனை பொறுப்பேற்று உறுதிப்படுத்தல் வேண்டும்.

தொடர்புடைய கணக்கில்/கணக்குகளில் போதுமான நிதிகள் காணப்பட்டாலொழிய, வங்கியின் விஇவ ஊடாக நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கலை பயனுறுத்த எக்காலத்திலும் முயற்சித்தலாகாது அத்துடன் எதிர்காலத் திகதிக்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களானது தொடர்புடைய திகதியில் சொல்லப்பட்ட கணக்கில்/கணக்குகளில் போதுமான நிதி காணப்பட்டால் மாத்திரமே வங்கியினால் நிறைவேற்றப்படும் அல்லது நிறைவேற்றப்படுவதற்காக அனுமதிக்கப்படும் என்பதற்கு உடன்படுதல் வேண்டும் மற்றும் கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் பெறப்படுகின்ற நேரத்தில் மற்றும்/அல்லது அத்தகைய கொடுப்பனவுகள் நிலுவையாகின்ற நேரத்தில் பெயர்குறிக்கப்பட்ட கணக்கு/கணக்குகளில் போதுமான நிதிகள் காணப்பட்டாலொழிய கொடுப்பனவு அறிவுறுத்தல்களை மதிப்பதற்கான கடப்பாட்டின் கீழ் இல்லை என்பதற்கும் மேலும் உடன்படுதல் வேண்டும்.

அந்தரங்கத்தன்மை தொடர்பிலான ஒழுங்கமைப்பின் கடப்பாடானது வரையறையின்றி தொடருதல் வேண்டும்: அவை இந்நியமங்களின் காலாவதியிலோ அல்லது முடிவுறுத்தப்படுதலினாலோ முடிவடையவோ அல்லது ஒழுங்கமைப்பு மற்றும் வங்கிக்கு இடையிலான உறவு முடிவுக்கு வருகின்ற நிகழ்வில் முடிவுக்குவரப்படவோமாட்டாது.

ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது ஒழுங்கமைப்புக்கும் வங்கிக்கும் இடையிலான வேறேதேனும் உடன்படிக்கைகள் எதுஎவ்வாறாயினும், வங்கியின் இரண்டு அதிகாரிகளிடமிருந்து சான்றுரைகளுடனான கூற்றானது அனைத்து சட்ட மற்றும் வங்கிக்கும் எமக்கும் இடையிலான ஏனைய வழக்களிலும், அவ்விடயம் வங்கியின் விஇவ பயன்பாட்டின் கீழாக எழுவதோ அல்லது வேறுவகையிலானதாகவோ எழுவதாக எவ்விடயமாயினும், ஒழுங்கமைப்புக்கு எதிராக ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாதாகுதல் வேண்டும் என்பதனை ஒழுங்கமைப்பு உடன்பட்டு ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் அத்துடன் அத்தகைய கூற்றானது (கணினி கூற்றோ அல்லது வேறு வகையானதோ) ஒழுங்கமைப்பு மாறாக நிரூபித்தாலன்றி அனைத்து நோக்கங்களுக்காகவும் ஒழுங்கமைப்புக்கும் வங்கிக்கும் இடையிலான இறுதி பிணைப்பு மற்றும் சான்றாகுதல் வேண்டும்.

வங்கி எந்நேரத்திலும் இந்நியதி மற்றும் நியமங்களில் எதையேனும் காலத்திற்கு காலம் திருத்த, பிற்சேர்க்க அல்லது மாறுபடுத்த உரித்துடையதாவதுடன் அதனுடைய முற்றான தற்றுணிபினில் அல்லது அது அவசியமென கருதுகின்றபோது அத்தகைய திருத்தங்கள், பிற்சேர்க்கைகள் அல்லது மாறுபடுத்தல்கள் ஒழுங்கமைப்பினை பிணைப்பதாக காணப்படுதல் வேண்டும் என்பதனை ஒழுங்கமைப்பு அறிந்து இத்தால் உடன்படுகின்றது.

வங்கியின் விஇவ பயன்பாட்டுடன் இணைந்த சிறப்புரிமைகளை வங்கி தீர்மானிக்கும் அத்துடன் வங்கி தோதானதென கருதுகின்றவாறு, காலத்திற்கு காலம், இம்முன்னுரிமைகளையும் இதனகத்து இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையும் மாற்றுவதற்கும், மாறுபடுத்துவதற்கும், சேர்ப்பதற்கும் அல்லது திருத்துவதற்கும் முற்றான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வங்கி இந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் தொடர்புடைய விண்ணப்பத்தினை தொடர்ந்து, ஒழுங்கமைப்பின் பெயரில் திறக்கப்பட்ட எந்தவொரு கணக்கினையும் இணைக்கலாம் அல்லது பிரிக்கலாம். அத்தகைய இணைப்பு அல்லது பிரிப்பு வங்கியின் தற்போதிருக்கின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் காரணமானதென்பதனை ஒழுங்கமைப்பு இத்தால் அறிந்து உடன்படுகின்றது.

வங்கியின் விஇவ இற்கு புதிய வசதிகள்/தெரிவுகளை காலத்திற்கு காலம் வங்கி அறிமுகப்படுத்தலாம். ஒழுங்கமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட இவ்விண்ணப்பத்தினை தொடர்ந்து இணைக்கப்பட்டவை ஒழுங்கமைப்பு அத்தகை சேவையின் கிடைப்பனவிற்காக அதுவே பதிவுசெய்ததோ அல்லவோவாயினும், ஒழுங்கமைப்பு அத்தகைய சேவைக்கு செல்லுபடியாகின்ற நியதிகள் மற்றும் நியமங்களினால் கட்டுறுத்தப்பட இத்தால் உடன்படுகின்றது.

வங்கியின் விஇவ இனால் வழங்கப்படுகின்ற குறிப்பிட்ட சேவைக்காக பதிவுசெய்வதற்கு வங்கி ஒழுங்கமைப்பை தேவைப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய சேவையை ஒழுங்கமைப்புக்கு கிடைக்கச்செய்வதற்கு அத்தகைய பதிவிற்கு இணங்குவதற்கு ஒழுங்கமைப்பு பொறுப்பேற்றல் வேண்டும். வங்கியின் விஇவ இக்கான இவ்விண்ணப்பத்தின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக வருகின்ற தொடருகின்ற பதிவுக்கான அத்தகைய கோரிக்கைக்கும் மற்றும் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஒழுங்கமைப்பு உடன்படுதலும் வேண்டும். வங்கியின் விஇவ பயன்பாடானது வங்கியின் தற்போதுள்ள அமைப்புப்புறவிதிகள் மற்றும் அமைப்பாக்கவிதிகள், நிபந்தனைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அனைத்து சேவைகள், வசதிகள் மற்றும் வங்கியின் விஇவ இனால் உள்ளடக்கப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களை ஆளுகின்ற ஏதேனும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவானதாகும்.

## 11. வங்கிக் கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்

விஇவ சேவை ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய அனைத்து கட்டணங்களுடன் சட்ட கட்டணங்களின் வேறேதேனும் பொறுப்புடைமைகளை அல்லது விஇவ சேவை பயன்பாடுடன் தொடர்புடையதாக அரசாங்கத்தினால் விதிக்கப்படக்கூடிய ஏனைய நிலையியற்கட்டளை கட்டணங்களையும் அதனது கணக்குகளிலிருந்து பற்றுவைப்பதற்கு ஒழுங்கமைப்பு வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றது.

விஇவ சேவைக்கான கட்டணங்களை எவ்வித முன்னறிவித்தலுமின்றி காலத்திற்கு காலம் மீள்திருத்துவதற்கு SDB வங்கி உரித்துடையது என்பதனை ஒழுங்கமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

## 12. பாதுகாப்பான மின்னஞ்சல் செய்தி

(அ) வங்கி இவ்வசதியினை ஒழுங்கமைப்புக்கு கிடைக்கக்கூடியதாக்குமானால், ஒழுங்கமைப்போ அல்லது வங்கியோ விஇவ சேவை மீதான பாதுகாக்கப்பட்ட இலத்திரனியல் செய்திகள் ஊடாக ஒருவருக்கொருவர் தொடர்பாடலை மேற்கொள்ளலாம்.

(ஆ) அத்தகைய செய்தியின் பெறுகையானது சரியான காலத்திற்குள் வங்கியினால் மின்னஞ்சல் வழியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ உறுதிப்படுத்தப்படும் அத்துடன் உறுதிப்படுத்தலாக வங்கி முதலில் ஒரு செய்தியை அனுப்பும்வரையில் எந்த கோரிக்கையும் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது. வங்கி அத்தகைய கோரிக்கையை அது நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக மீளெடுக்க இயலுமானதாக காணப்படுதலாகாது.

(இ) ஒழுங்கமைப்பு அவர்களது பயனர்களில் எவரும் வங்கிக்கு செய்திகளை அனுப்புவதில்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(1) சேவையில் விசேட செயற்பாடொன்று காணப்படுகின்ற விடயங்கள் தொடரபில்

உம் - ஒழுங்கமைப்பின் அல்லது அதன் பயனாளர்களின் முகவரி மாற்றம் அல்லது கொடுப்பனவொன்றை மேற்கொள்ள எங்களுக்கு அறிவித்தல்

(2) உடனடி அவதானத்தை கோருகின்றவை (பயனர் எமது 24 மணிநேர அழைப்பு மையத்தினை அழைக்கலாம் அல்லது அருகிலுள்ள எமது கிளைக்கு செல்லலாம்)

(3) கொடுக்கல்வாங்கல் தன்மையினை கோருகின்றவை

உம் - வியாபார அல்லது நிதி முகாமைத்துவ அறிவுறுத்தல்களை பகிருதல்

(4) காசோலை(காசோலைகள்) அல்லது கடனட்டை(கடனட்டைகள்) காணாமற்போனமை அல்லது களவுபோனமை முறைப்பாடு (பயனர் எமது 24 மணிநேர அழைப்பு மையத்தினை அழைக்கலாம் அல்லது அருகிலுள்ள எமது கிளைக்கு செல்லலாம்)

(5) தண்டனைக்குரியதும், அற்பமானதும் அல்லது ஏனையவகையில் பொருத்தமற்றதுமானவை

அத்தகைய மின்னஞ்சலைப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில், வங்கியின் முழுமையானதும் முற்றானதுமான தற்றுணிபின்பேரில் வங்கி, ''மின்னஞ்சல்'' வசதியை நீக்கும் அல்லது கீழுள்ள 13 ஆம் வாசகத்திற்கமைய சேவையை முடிவுறுத்தும்.

(ஈ) எந்தவொரு சூழ்நிலையிலும் SDB இனால் அனுப்பப்பட்ட ஏதேனும் செய்தியொன்று குறிப்பிட்ட நிபந்தனைகள் அல்லது உற்பத்தி அல்லது சேவையை ஒழுங்கமைப்புக்கு முழுமையாக வழங்குவதற்கான சலுகையாக கொள்ளப்படுதலாகாது. வங்கியின் அனைத்து பொருட்களும் சேவைகளும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவானதாகும்.

### 13. முறைப்பாடு செயன்முறை

சேவை குறித்து ஒழுங்கமைப்புக்கு கருத்து/முறைப்பாடு காணப்படுமாயின், தயவுசெய்து ளுனுடீ வங்கியின் அழைப்பு மையத்தினை அழைத்து தொடர்புகொள்ளவும். வங்கி சாத்தியமான விரைவில் முறைப்பாடுகளை தீர்க்க முற்சிக்கும்ளூ எனினும், பிரச்சினை சிக்கலானதெனில், அதனைத் தீர்ப்பதற்கு காலம் செல்லும். அத்தகைய சந்தர்ப்பங்களில், மேலதிக தகவல்களை கோரும் விண்ணப்பப் படிவம் தேவைப்படுத்தப்படும்.

வங்கி முறைப்பாட்டினை விசாரிக்கும் என்பதுடன் முறைப்பாடு பெறப்பட்டு 21 நாட்களுக்குள் விசாரணையின் பெறுபேறினை விவரித்து ஒழுங்கமைப்புக்கு அறிவிக்கும் அல்லது, வங்கிக்கு மேலதிக நேரம் அல்லது தகவல் தேவைப்படுமெனில், அப்பிரச்சினை எவ்வாறு கையாளப்படும் மற்றும் பதிலினை எப்போது ஒழுங்கமைப்பு எதிர்பார்க்கலாம் என ஒழுங்கமைப்பு அறிவுறுத்தப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில், பூர்த்திசெய்வதற்கு அதிகமான நாட்களை எடுக்கின்ற விசாரணைகளது மாதாந்த இற்றைப்படுத்தல்கள் ஒழுங்கமைப்புக்கு வழங்கப்படும். விடயம் குறித்து ஒழுங்கமைப்பிடமிருந்து வங்கி பதிலினை எதிர்பார்த்திருக்கும் போது மேலுள்ள காலப்பகுதி செல்லுபடியானதாகாது.

SDB வங்கி பெறுபேறினை ஒழுங்கமைப்புக்கு அறிவிக்கும்போது, அதனது தீர்மானத்துக்கான காரணங்களையும் ஒழுங்கமைப்புக்கு அறிவிக்கும். ஒழுங்கமைப்பின் கணக்கு தவறாக வைப்பிலிடப்பட்டுள்ளதாக அல்லது பற்றுவைக்கப்பட்டுள்ளதாக அடையாளங்காணப்படுகின்றபோது, SDB வங்கி ஒழுங்கமைப்பின் கணக்குகளை அதற்கிணங்க சீர்படுத்தும் என்பதுடன் அவ்வாறே ஒழுங்கமைப்புக்கும் அறிவிக்கும்.

### 14. தொலைபேசி அழைப்புகளை பதிவுசெய்தல்

SDB வங்கியின் அழைப்பு மையத்திற்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகளை SDB வங்கி தரக்கட்டுப்பாடு மற்றும் பயிற்சி நோக்கத்திற்காக பதிவுசெய்யும்.

**15. பொறுப்புடைமை**

வாசகம் 6 மற்றும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட விரிவுக்கமைவாக,

வங்கியின் தரப்பிலான மொத்த அலட்சியம் அல்லது வேண்டுமென்ற தவறான நடத்தை அல்லது தவறுகை மற்றும் புறநீக்கம்செய்யப்படமுடியாததும், சீர்படுத்தமுடியாததும் அல்லது வரையறுக்கப்படமுடியாததுமான காரணங்களால் ஏற்பட்டவை தவிர, சேவையை அணுகியதனால் அல்லது அணுகுவதிலான இயலாமையின் காரணமாக ஏற்பட்ட, விளைவாந்தன்மையானதோ அல்லவோயாயினுமான, ஏதேனும் சேதம் அல்லது சட்ட செலவுகள் உள்ளிட்ட இழப்புக்கு SDB வங்கி பொறுப்பானதாகமாட்டாது.

வலைத்தளத்தில் வழங்கப்பட்ட தகவல் துல்லியமானது என்பதனை உறுதிப்படுத்த SDB வங்கி நியாயமான முயற்சிகளை மேற்கொள்கின்றது எனினும் அதனது துல்லியம், போதுமை, சரியாந்தன்மை, செல்லுபடியாந்தன்மை, பூரணத்துவம் அல்லது ஏதேனும் நோக்கத்துக்கான பொருத்தப்பாட்டுக்கு உத்தரவாதமோ கட்டுறுத்தோ வழங்காது.

SDB வங்கியின் வலைத்தளம் வைரசுகள் அல்லது தீங்கான உள்ளடக்கங்கள் அற்றது என SDB வங்கி கட்டுறுத்தாது. தரவுத்தளம் தவறற்றதாக முழுமையாக நம்பப்படுவதற்கு போதுமான பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும், தரவுத்தளத்தில் அத்தகைய தவறு ஏதும் எழுவதிலான ஏதேனும் பொறுப்புடைமையிலிருந்து ளுனுடீ வங்கி பொறுப்புத்துறக்கின்றது.

வங்கியின் விஇவ பயன்பாட்டுக்கு அத்தியாவசியமாகக்கூடிய ஏதேனும் கருவிகளை, முறையாக செயற்படும் நிலையிலும் அத்தகைய கருவிகளுக்கு அல்லது வங்கியின் விஇவ இற்கான தீங்குமிகு அச்சுறுத்தலுக்கு எதிரானதாகவும் பெற்றுக்கொள்வதும் அதனை பேணுவதும் ஒழுங்கமைப்பின் பொறுப்பாகும் என்பதனை அறிந்துள்ளது என்பதனை ஒழுங்கமைப்பு இத்தால் கட்டுறுத்துகின்றது.

இந்த தரவுத்தளத்திலுள்ள தகவல்கள்/கூற்றுகள்/சான்றிதழ்கள் அனைத்தும், அவற்றினது சட்ட தாக்கம், முழுமை மற்றும் செயன்முறையின்கீழான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களின் தாக்கமானது ஒழுங்கமைப்பின் கணக்கில் முழுமையாக பிரதிபலிக்காதவாறு, வெளிப்படையானதோ அல்லது மறைமுகமானதோவான எந்தவொரு கட்டுறுத்தலுமின்றி வழங்கப்பட்டுள்ளன. ஒழுங்கமைப்பின் பதிவுகளுடன் இணங்காத, கொடுக்கல்வாங்கல்களின் போது, கூடியவரை விரைவாக அத்தகைய வேறுபாடுகளை வங்கியின் கவனத்திற்கு கொணருமாறு ஒழுங்கமைப்புகள் கோரப்படுகின்றன. தகவல்கள்/கூற்றுகள்/சான்றிதழ்கள் அனைத்தும் செல்லபடியாகும் சட்டங்களுக்கு இணங்க பயன்படுத்தப்படுதல் வேண்டும். தகவல்கள்/கூற்றுகள்/சான்றிதழ்களின் பயன்பாடானது ஒழுங்கமைப்பின் சொந்த இடர்நேர்வின்மீது பயன்படுத்தப்படவேண்டும் என்பதுடன் அத்தகையதுக்கான எந்தவொரு பொறுப்புடைமையையும் SDB வங்கி பொறுப்பேற்காது. இந்நியதிகள் மற்றும் நியமங்களுக்கு கீழான கடப்பாடுகளை பின்பற்றுவதில் ஒழுங்கமைப்பு அல்லது அதன் பயனர்கள் தவறுதல் அல்லது சேவையை பயன்படுத்துகின்றபோது கவனயீனமாக அல்லது மோசடியாக செயற்படுவதனால் வங்கிக்கு உறக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக வங்கியை ஈட்டுறுதிப்படுத்துவதற்கு ஒழுங்கமைப்பு பொறுப்புடைமையானதாக காணப்பட உடன்படுகின்றது. நியதிகளுடன் ஒத்திசைவதிலும் பாதுகாப்பு குறிப்புக்களை பேணுவதிலும் ஒழுங்கமைப்பு தவறுவதினால் ஒழுங்கமைப்புக்கு உறப்படும் ஏதேனும் இழப்புக்கு SDB வங்கி பொறுப்பாகமாட்டாது. இணைய பயன்பாடானது மேலே விவரிக்கப்பட்ட பாதுகாப்பு தன்மைகள் அல்லாதவையும் ஆனால் வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் எழக்கூடியதுமான, உதாரணமாக, தொடர்பாடல் வலையமைப்பின் தோல்வி, இயந்திரங்களின் பழுது, மின் துண்டிப்பு, பிறழ்செயல், கருவிகளின் பழுது அல்லது போதாமை போன்ற ஏனைய இடர்களுக்கு அமைவானதாகும். ஆயினும்,

இவ்விடர்கள் ஒழுங்கமைப்பின் கோரிக்கை அல்லது கொடுக்கல்வாங்கல்கள் தாமதமாகுதல், இழத்தல் அல்லது தவறுதலாக பரிமாற்றப்படுதல் மற்றும் ஒழுங்மைப்புக்கு இழப்புக்கள் உறுவதற்கு காரணமாகலாம். வங்கி ஒட்டுமொத்த கவனயீனமாகவன்றி, வங்கி அத்தகைய இழப்புகளுக்கு பொறுப்பானதாகமாட்டாது.

## 16. இணைய வங்கிச்சேவையை இல்லாமலாக்குதல்

ஒழுங்கமைப்பின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்ப/சபைத் தீர்மானத்தினால் கையொப்பமிடப்பட்டு, காரணத்தினை குறிப்பிட்டு எழுத்துமூல கோரிக்கையொன்றை வழங்குவதன் ஊடாக எந்நேரத்திலும் சேவையினை ஒழுங்கமைப்பு நிறுத்தலாம்.

முன்னதாக வழங்கப்பட்ட அனைத்து டோக்கன் உபகரணங்கள்/வன்பொருள் டோக்கன்களும் கோரிக்கையுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒழுங்கமைப்புக்கு முன்கூட்டிய அறிவித்தலொன்றை வழங்குவதன் ஊடாக SDB வங்கி எந்நேரத்திலும் சேவை அல்லது இதனகத்தான ஏற்பாடுகளை இல்லாமலாக்கும்.

## 17. ஆளும் சட்டங்கள்

இலங்கையில் வலுவில் இருக்கும் சட்டங்கள் இந்நியதிகளையும் நியமங்களையும் மற்றும் இதன்கீழ் முன்னெடுக்கப்படும் கொடுக்கல்வாங்கல்களையும் ஆளும். ஏதேனும் பிணக்கொன்றின்போது இலங்கையின் தகுதிவாய்ந்த நீதிமன்றங்களின் பிரத்தியேகமற்ற நியாயாதிக்கத்திற்கு ஒழுங்கமைப்பு மற்றும் வங்கி என இரண்டும் உட்பட்டனவாகும்.

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் | பணிப்பாளர் | பணிப்பாளர் |
| பெயர்: | பெயர்: | பெயர்: |
| முத்திரையில் கையொப்பம் | முத்திரையில் கையொப்பம் | முத்திரையில் கையொப்பம் |
| திகதி | திகதி | திகதி |

வங்கிப் பாவனைக்காக

CIF இல: ……………..

……………………………… ………..……………………………

தரவினை முறைமையில் பதிவேற்றியவர் தரவினை முறைமையில் அனுமதித்தவர்

……………………………………….. ……………………………………..

கையொப்பம்/ஊசேந இல: கையொப்பம்/ஊசேந இல:

திகதி [ ] திகதி [ ]